Registered at the G. P. O. AS A NEWSPAPER

# சன்மார்க்கபோதினி.

SANMARKA POTHINI

பத்திரிகைவிலைவிகிதம்
ஆண்டுக்கு ரூபா ௪-௫௰
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫௰
இந்தியாவுக்கு சதம் ௫௰
பிறதேசங்களுக்கு ௭௫

விளம்பர விலைவிகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
௧௰ க்குமேல்ஒருவரிக்கு 8
௨௰ க்குமேல் ............ 6
இனைப்பிரசுரமொல்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

XXX JAFFNA SEBTEMBER 1st 1914 No 18

௩௰ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௪ம் ௵ புரட்டாசிமீ ௧௨ செவ்வாய்க்கிழமை. சஞ்சிகை ௧௮

## நம்மரசாட்சி செயம்பெறும்.

உலகத்தைப் பற்பலஅரசர் ஆளுகிறார்கள். என்றாலும் அங்கிலோஅரசின் சாமர்த்தியமும்விவேகமும்சுகுணலட்சணங்களும்மற்றையஅரசுகளுக்கில்லை. அங்கிலேயஅரசு கூடியவரையில் தம்மைப்பேணிப் பிரசைகளைப்பாதுகாத்துச் செங்கோல் பாராட்டிவந்தது. வருகின்றது என்பதில் மயக்கமில்லை. அவ்வித உபாயத்தை இம்முறை பிரயோகித்துப் பல்லாயிரங்கொலையை விலக்கத் தங்களவுராவத்தைஸ்தாபிக்க அவுஸ்திரியா சாவகாசங்கொடுக்கவில்லை. பால்கன் யுத்தத்தில் அங்கிலோஅரசுகாட்டிய திறமையும் உபாயமும் இந்த யுத்தமட்டிலுங்காட்டச் சாவகாசமில்லாமையாலேயே உலகிற்கு அனர்த்தம் நேரிட்டிருக்கிறது. உலகில்எப்பகுதிகளிலும்அங்கிலேயர் அரசுசெலுத்திவருகின்றார். என்றாலுங் கொடுங்கோன்மையின்றி நடுநீதிதவறாது பக்குவங்கண்டு சுயஅரசுகொடுத்தும் சுதேசஅரசரை நியாயமின்றி நீக்கிவிடாமலும் பரிபாலனஞ்செய்துவருகிறது வியப்பிற்குரியது. என்றாலும் இந்தியா ஆதியவிடங்களில் சில இராசாங்கதுரோகிகள் தம் [illegible] க்கிரியைகளைச் செய்துவருகின்றனர். அவ்விதமானோரன்றி நெறிநீதிபெருந்தியவர்கள் அங்கிலேய ராசாங்கத்தையன்றி வேறு புறஅரசுகளை விரும்பார். அப்படியிருந்தும் சர்மனியர் இந்தியா ஆதியஇடங்களுக்குள் கலகத்தைக் கிளப்பும்படி வேவாளரை அனுப்பியிருக்கிறார்களென்று கதைபுகைகிறது. அவ்வித வேவாளர்பேச்சில் எட்டவரும வேவாளருங் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கதி யாதாமோ அறியோம்! சிலர் கண்ணைமூடிக்கொண்டு வேடிக்கைபார்க்கப்போலும் யுத்த ஆரவாரங்களைக்காணவும் பிறஅரசுவந்துபுகவும் அபேட்சிக்கிறாரெனக்கேள்வி. ஐயையோ! அப்படியானால் நந்தேசம் என்னபாடுபடும்? நிழலினருமை வெயிலிற்றான்தெரியும். அப்படி மாற்றான்வந்து புகுந்தபின்தான் தரும ராசாங்கத்தைவாழ்த்துவார்கள். தற்கால யுத்தத்தைக்குறித்து நாம் அஞ்சவேண்டியதில்லை, ஏனெனில் நம்மரசாட்சியார்கை பெலத்திருக்கிறது. சத்துருக்கள் எவ்வளவு வீரங்காட்டினும் சிக்கிரங் களைப்படைந்து நம்மராசாங்கத்தார் சொல்லும் நிபந்தனைக்குட்பட்டுத் தம் செருக்கொழியுங்காலம் அடுத்திருக்கிறது.

உலகத்திற் சமாதானத்தையுண்டுபண்ணும்நோக்கமாக யுத்தஎத்தனத்தைக் குறைக்கும்படிகேட்டபோது சர்மனிமாத்திரஞ் சம்மதியாதது அதன் கர்வமல்லவா? நாளடைவில் யுத்த எத்தனங்களைச்செய்து வந்ததும் நம்மரசாட்சியாரை நசுக்கவல்லவா? இராசதந்திரத்திற் பேர்போன நம்மரசாட்சியாரிடமா சர்மனியரின்சூழ்ச்சி பலிக்கிறது.

முந்த நம்மரசாட்சியார்க்கு ரூசியர் விரோதிகளாயிருந்தார்கள். அவர்கள் இந்தியாவில் கண்வைத்துவந்தார்கள். அதற்காக அங்கிலோ இராசதந்திரிகள் ஆப்கான் அமீரைத் தம்வசமாக்கி வேண்டிய உதவிசெய்து அவ்வழியாய் இந்தியாவுட்புகாமல் தக்க பிரயத்தனங்களெல்லாஞ் செய்துவைத்திருந்தார்கள். ரூசியா யப்பானுடன்முட்டி முறிந்துபோனசமயத்திலே அங்கிலேயர்யுத்தத்தில் ஒருவர்க்கொருவர் உதவிசெய்வதென்று உடன்படிக்கைசெய்து பகையை ஒழித்துக்கொண்டார்கள். சர்மனியர் பிரான்சருக்குச் சத்துருக்களானதினால் பிரான்சருடனும் அங்கிலேயர்சேர்ந்து முக்கூட்டு உடன்படிக்கைசெய்துகொண்டார்கள். அம்மட்டோ ரூசியரின் சத்துருக்களான யப்பானியருடனும் முன் உடன்படிக்கைசெய்துகொண்டனர். சர்மனியும், அவுஸதிரியாவுடனும் இத்தாலியுடனும் இவ்வித உடன்படிக்கை செய்ததாயினும் தக்க இராசதந்திரமின்மையால் கூட்டுடையவும் இடைகின்றவர்களைப்பகைக்கவும்நேரிட்டது. சர்மனி நம்பியிருந்த இத்தாலி கைதட்டிவிடச் சர்மனி களைகொண்டது. முக்கூட்டுடன்படிக்கைகாரருடன் யப்பானுஞ்சேர்ந்து யுத்தத்தைநடத்தச் சர்மனியும் அதனுடன்சேர்ந்த அவுஸ்திரியாவும் உள்ளதையும் பறிகொடுத்துப் பரிதபிக்கப்போகின்றன.

நம்மரசாட்சியாருக்கு இந்திய சிற்றரசரெல்லாம் பணமும் பொருளும் சேனையுங்கொடுத்து உதவ முன்வந்திருக்கிறார்கள். அப்படியே கனடா அவுஸதிரியா ஆதிய பிரித்தானியாவுக்குட்பட்ட நாடுகளெல்லாம் துரிதமாய் உதவிசெய்கின்றன. யுத்த நிதிகளும் யுத்தத்தில்மரித்தவர்களின் குடும்பங்களுக்காகச் சேகரிக்கும்நிதிகளும் நாளடைவில் தொகையேற்றம்பெற்று வருகிறது. பணத்தாலோ சனத்தாலோ உணவுப்பொருட்களாலோ பிரித்தானியா சோர்வுறாது. ஆனால் சத்துருக்கள் இதுவிஷயத்தில் சிக்கிரந் தளர்ந்துபோவர். சர்மனியில் ஒருவருக்கு உணவுக்குத்தக்க [illegible] யுத்தகாலத்தில் ஆறுமாசங்களுக்குக்காணுதென்றோமெனணுகிறோம். எவ்வளவு பொருட்கள் சத்துருக்கள் கைவசமாமோ ஆரறிவார். சர்மனியரின்எண்ணம்விசாலமாயினும் கடவுள்கிருபையால் அவர்களின் சத்துருக்களும்விசாலமாயினர். "விழுதலுக்குமுன் அகங்காரம்" என்றதை இவர்மட்டிலே நாம் சிக்கிரங்காண்போம்.

இப்பரிதாபகோலத்தையும் நேரிடும் உயிர்நட்டத்தையும் உணர்ந்த பாப்பரசரும் இதைத்தடுக்கப் பிரயாசப்பட்டுங் கூடாமல் துக்கத்தினால் உயிர்விட்டுவிட்டார். இனி அமெரிக்க ஐக்கியமாகாணம் முயற்சிசெய்தால் ஒருவாறியலும். என்றாலும் ஒருபுறந் தோல்வியடைந்து அவர்தலைகுனிந்தாற்றான் சமாதானம் நடைபெறும். இந்த யுத்தத்தினால் முழுஉலகத்திற்கும் பெரிய நட்டம். எந்தஅரசும் அதிக நன்மையடையப்போறதில்லை. வென்றவர்களியும் தோற்றவர் சாம்பருமாகவே போவர். அவ்விதம் சாம்பராவது சர்மனியும் அவுஸ்திரியாவுந்தானென்று விவேகிகள் எண்ணுகின்றனர். ஆதலால் நம்மரசே செயம்பெறும் என நாம் நம்பியிருக்கலாம்.

## யுத்தநிலை.

தற்கால யுத்தநிலையைப் பார்த்தால் உண்மையானசங்கதிகள்சிலமறைக்கப்படுகின்றனபோலத்தோற்றினாலும் குறிப்பினால் உண்மை வெளியாகாதிராது. சர்மனிய அவுஸ்திரியதேசங்களைக் கீழ்த்திசையில் ருசியர்நைப்பற்றிவருகின்றனர். ஆனால் சர்மனியர் அவர்களை எதிர்க்காமலே பின்வாங்கிவிடுகிறார். ஏனெனில் சர்மனியசேனையின் தக்க சேனாபதிகளும் யுத்தவீரரும் பிரான்சில்கண்ணோட்டமாயிருப்பதினால் முந்தப் பிரான்சைப்பார்த்துப் பிந்தவந்து தந்தேசத்தைக் காப்போமென்று நினைத்திருக்கிறார்போலே விளங்குகிறது. ருசியா சர்மனியதலைநகருக்கு 300 மைலுக்கிப்புறம் நிற்றால் சர்மனியர் அதைப் பறுவாய் பண்ணவில்லைப்போலும். சர்மனியருக்கு மிகுதொகையான நட்டம்நேரிட்டாலும் பறுவாய்பண்ணமல் பிரான்சுக்குள் நுழைந்துவிட்டார்கள். என்றாலும் லகுவில் தாண்டிச்செல்லப் பிரான்சிய அங்கிலேயர் விடமாட்டார்கள். இந்தியபட்டாளமும் பிரான்சுக்குச்செல்லுகிறது. அதற்குள் சர்மனி செயிக்காவிடின் இந்தியபடை தமது வீரத்தைக்காட்டிச் சர்மனியரைஓட்டாதுவிடாது. ஆபிரிக்காவிலும்சீனாவிலுமுள்ள இடங்களுமசர்மனியரால பறிபோய்விடும்பக்குவத்திலிருக்கிறது. வடகடற்சண்டையில் 5 யுத்தக்கப்பல்களை இழந்துவிட்டார்கள். அதில் அனேகஉயிரும் பொருளும் மாண்டிருக்கும். இப்படியே சர்மனிக்கு நட்டத்தின்மேல் நட்டம்வரினும் விடாப்பிடியாய்க் கடைசிபரியந்தம் யுத்தமாடும்போலிருக்கிறது.

## துருக்கியின் நிலைமை.

துருக்கியும் யுத்தஆயத்தஞ் செய்கிறது. ஆனால்தான் நடுவுநிலைமை வகுத்திருக்கிறேன் என்றுசொல்லுகிறது. சர்மனிக்குச் சத்துருக்கள் அதிகரித்துக் கொண்டபடியால் இப்படிச்சொல்லுகிறதென்று நம்பவேண்டியிருக்கிறது. சர்மனிசெயம்பெற்றால் அத்துடனே துருக்கியும்சேர்ந்து கொள்ளும்போல தோற்றுகிறது. இத்தருணத்தில் அங்கிலோ பிரான்சிய ருசியா இராசதந்திரத்தையனுசரித்து, துருக்கியைத்தாம் பங்கப்படுத்தமாட்டோமென்று உறுதிமொழி கூறியிருப்பதால் துருக்கி நடுவுநிலைமையில்நிற்பதுதான் அதற்குச்சேமமாகும். சர்மனியரின், கோபென் பிரேஸ்லா என்ற இருகப்பல்களும் டார்டனெல்ஸ் சலசந்தியினிற்பது நடுவுநிலைமைக்கு விரோதமென்று அங்கிலேயராதிய எதிர்கட்சியார் எண்ணுகின்றனர். அக்கப்பல்களில்துருக்கி தமதுஉத்தியோகஸ்தரைவைக்கப்போகிறதென்ற ஓர் சமாச்சாரம் வந்ததினால் அதைத்துருக்கி வாங்கிக்கொண்டதாக எண்ண இடமிருந்தது. ஆனால் அதன்பின்னும் அக்கப்பல்கள் "சர்மனிய" கொடியுடனே காணப்பட்டனவென்றுதெரிகிறது. அங்கிருந்து மிடிலின்நகருக்குவந்தபத்திராக்கடிதர்தாம்தூரதிருஷ்டிக்கண்ணாடியாற்பார்த்தபோது துருக்கி உத்தியோகஸ்தர் அக்கப்பல்களுக்குச்சென்று சகோதரர்கள் போலக்கொண்டாடினார்களென்றுதெரிவித்தனராம். அவைகளிலிருந்தசர்மனியஉத்தியோகஸ்தர்அங்கிருந்துபலகப்பல்களுக்குஞ்சென்று அவைகள் அங்கிங்கு செல்லக்கூடாதென்று கட்டளையிட்டனராம். அக்கப்பல்களில் பிரித்தானிய கப்பலுமொன்று. சக்கேவியன்என்ற பிரான்சிய கப்பலிலிருந்த கம்பியில்லாத்தந்தி ஸ்தாபனத்தைச் சர்மனியர் அழித்துவிட்டனர். துருக்கி, சர்மனியர் மனம்போனபடி நடத்தினார்களென்று மற்றையஅரசுகளை மன்னிப்புக்கேட்கிறதாம், துருக்கியர் பிரித்தானிய பிரான்சிய ருசிய இத்தாலியகப்பல்களை பலநாள் தாமதஞ் செய்கிறார்களென்று கதைபுகைகிறது. அச்சர்மனியகப்பல்களிலிருக்கும் போர்க்கருவிகளை நீக்கிவிடும்படி மற்ற அரசுகள் துருக்கியைக் கேட்பார்களாம். அதற்குத் துருக்கிசம்மதிக்க வேண்டியநேரிடுமென்று நம்புகிறோம்.

## பாப்பரசரின் மரணம்.

இவர் சென்ற 19உ இரவு 4 மணி 50 நிமிஷத்தில் இவ்வுலகசீவியத்தை நீத்தார்.

ஓர்காலத்தில் பெரும்பான்மையான (ஐரோப்பிய) அரசுகளெல்லாம் பரி. பாப்பானவரின் செல்வாக்குக்குட்பட்டு அவரது வார்த்தைப்படிகேட்டு நடந்துவந்தது. அக்காலத்தில் விசேஷ காரணமின்றிச்செய்யும் யுத்தங்களில் பாப்புமார் தலையிட்டு மத்தியஸ்தம் செய்துவந்தார்கள். தற்காலத்தோ பேரவாவால் இராச்சியங்களெல்லாம் தலைதடுமாற்றமாகித் தமக்குத்தாந் தலையென இறுமாப்புக்கொண்டு தம் கேர்கிலையினின்று பிரிந்துபோயினர்.

பிரான்சும் இத்தாலியும் பேரளவில் கத்தோலிக்க தேசமாயிருந்தாலும், பிரான்சின் பிரசாதிபத்திய கட்சியாருட்பலர் கிறீஸ்துவாத கொள்கையுட்பட்டு அம்மதவிசுவாசங்குன்றியும், இத்தாலி பாப்பு ஸ்தான சுதந்திரங்களைக்கவர்ந்தும் பாப்புஸ்தானத்திற்கு வெறுப்பையுண்டாக்கினர். ஆனால் அவுஸ்திரியாவும், பெல்ஜியமும் இன்னும் தம்விசுவாசத்தி லுறுதிகொண்டு பாப்பு ஸ்தானம்விதிக்குங் கட்டளைகளுக்கமைந்து நடந்துவருகிறது. இச்சண்டையினால் உயிர்நட்டமும் பொருள்நட்டமும் ஐரோப்பாவில் விசேஷமாய் இவ்விருதேசங்களுக்கும் உண்டாவதைத்தற்கால பாப்பரசரான 10ம் பத்திநாதரால் சகிக்கமுடியவில்லை. முன்னே சுகவீன ஸ்திதியிலிருந்த அவர்க்கு இந்தயுத்தந்தொடங்கிய நாள்முதல் பெலவீனமதிகரித்து அதனாலேயே சீக்கிரந்தமது சீவியஓட்டத்தை முடிக்கவேண்டியவரானார்.]

இவர் நல்லறிவுடனிருக்கையில் "முடிவு சமீபித்துவிட்டது. கருணைக்கடலாகிய கடவுள் இப்பொழுது ஐரோப்பாவுக்கு நேரிடுக்குந்துக்கங்களை நான்கண்டு சகிக்காதிருக்கும்படி என்னை அழைத்துக்கொள்ளுகிறார்" என்றுசொன்னார். அடிக்கடிவிழித்து யுத்தத்தைக்குறித்தே பேசினார். முற்காலத்தில் பாப்புமாராயிருந்தவர்கள் இப்படி கொலையைத்தடுக்கக் கூடியவர்களாயிருந்தார்கள். இப்போது எனக்குச்சக்தியில்லையென்று உருக்கமாய்ச்சொன்னார் அவரது சகோதரிகளும் சகோதரிகளின் பிள்ளைகளும், இரண்டுகாடினல்களும் அவ… கூடஇருக்கார்கள். இந்தயுத்தத்தினாலேயே அவர் இறந்துபோனார். சமாதானம் உண்டுபண்ண அவர்பட்ட பாடெல்லாம் வீணாய்ப்போயிற்று. அவர் பலம்போய்விட்டது, என்றுசெய்திவந்திருக்கிறது. இத்தாலி அரசரும் அரசியும் அவருடையதேக அசௌக்கியத்தைவிட்டுமிகவும் துக்கித்தார்களாம். இவர் சீவியகாலத்தில் இவர்கேட்ட உபகாரங்கள் கடவுளாற்றவறாது கொடுக்கப்பட்டு வந்ததாய் இவரது மரணத்தின்முன்னே பிரஸ்தாபமாயிருக்கிறது. இவ்விதபத்திசாலியையும் உத்தமஆயரையும்இழந்தது முழுஉலகத்துக்கும் நட்டமே!

# யாழ்ப்பாணம்.

வார்ச்சீர்,

(முள்ளுமுனையிலே என்றமெட்டு)

விரைமழைபெய்யவில்லைச்சலதோஷமெங்குமுண்
வேண்டும்பண மருமையாயிற்றம்மா (இ
நிரையுடன்வியாபாரம் நேராய்நடக்காமல்
நேர்ந்ததுகஷ்டம் நம்மூருக்கம்மா
வியாபாரக்கொம்பனியில் வேலையில்லாமலே
விக்கினப்படுவோர் மிகுதியம்மா
தயாளகுணமுடைய தற்பரன்யுத்தத்தாற் .
தண்டிக்கிறாரித் தரையையம்மா
அக்கினராசாங்க மமருக்குப்போனதிலு
லதற்குட்பட்டநமக்கு மல்லலையா
தக்கினதேயவுஸ்திரிய சர்மனியசாமான்கள்
சகலவரவுங்குறை வுற்றதம்மா
எங்குசண்டையெவர்வெற்றி யென்றிந்நாட்களி
எல்லோருங்கேட்டுக்கொண்டிருப்பாரம்மா (லே
தங்களெண்ணம்போலவே தப்பானசங்கதியைச்
சாற்றச்சபாசென்று கேட்பாரையா.

புதுமாதிரிப் புகையிலைச்செய்கை—திருநெல்வேலியிலே புதுமாதிரிப்புகையிலைச்செய்கை நடத்துவதற்கு குத்தகையில் வாங்கப்பட்ட நிலம்முழுவதும் அரசாட்சி அளவுகாரன் மெஸ். ஸ்பெல்ட் உவின்ட் அவர்களாலளக்கப்பட்டது. இந்நிலம்முழுவதும் ஒருகாணியாக்கப்பட்டுப் புகையிலைச்செய்கை நடத்தப்படும். இக்காணியைத்திரும்பச் சொந்தக்காரரிடம் ஒப்புவிக்கும்போது யாதும்தொந்தரவு நிகழாதபடி செய்வதற்கே இந்நிலம் இப்பொழுது அளக்கப்பட்டு எல்லைகள்குறித்துப் படமெடுக்கப்படுகின்றதாம்.

விசர்நாய்க்கலக்கடி—துணவி, அராலி, கொட்டைக்காட்டுப் பகுதிகளிலே விசர்நாயூசாட்டம் பெருங்கலக்கடியையுண்டாக்கியிருக்கின்றதாம். கடியுண்டசிலர் அபாயமான நிலையிலிருக்கின்றனராம்.

**பத்திரகிரயந் தாராதார்க்கு மறு பத்திரிகையை அனுப்பாமல்விடத் தீர்மானித்திருக்கிறேம்.**

ச. போ. ப.

வைகுரி—பட்டினத்திலே வைத்தியசாலை ரேருட்டையடுத்து ஒருஆளுக்கு வைகுரி கோயுண்டாயிற்று. அந்தஆளை அரசாட்சியோர் உடனே தொற்றுநோய் வைத்தியசாலைக்கு எற்றியனுப்பினர்.

அபாயமரணம்—புன்னாலைக்கட்டுகரையிலிருந்து சாதாளையேற்றிக்கொண்டு வண்டியிற்சென்ற ஓர்மனுஷன் வண்டியிலிருந்து விழுந்து சில்லால் நசுங்குண்டிறந்தனன்,

ஊர்க்கலாதி—கீரிவேலிச் சரவணமுத்துமானிப்பாயில் நிற்கிறுனென்று அங்கு கலாதியாயிருக்கிறது,

சண்டையிலிறந்தார்—சுண்டிக்குழித் தொம்சன் பாதிரியாரின் மகனும் சண்டையில் இறந்துவிட்டாரென்று கேள்வி.

மெஸ், கோமர் வன்னியசிங்கம்—பரீஸ்தர்ப்பட்டம் பெறும்நோக்கமாய் இங்கிலாந்துக்குச் சென்றிருக்கும் யாழ்ப்பாண அப்புக்காத்து மெஸ். II வன்னியசிங்கமவர்கள் வருகிற மார்கழிமாசம்வரையிற் பட்டம்பெற்றுத்திரும்புவார்.

### தோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் மூதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும்,ரோகம் நிறைந்தும்.இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம்,தலைநோவு; தைரியமில்லாமை,கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியமற்போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திரரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திரரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல் உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானல் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு புட்டி விலை, ரூபா. | .... | 2 | 0 | 0 |
| 6 புட்டியின் விலை, ரூபா. | ... | 10 | 8 | 0 |

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆன டப்பிலியு. ஏச். நமல்சுர் துரையவரிடத்திலும் கிடைக்கும்.

# இலங்கை.

கொப்பரு—கொப்பரு பாரமொன்று 50 ரூபாவரையில் விற்கிறது.

ஜர்மன் மறியற்காரர்—கொழும்பிலிருந்து 138 ஜர்மன் மறியற்காரரை "ரக்காம" வுக்குக் கொண்டுபோ யடைத்துவைத்திருக்கிறார்களாம்.

ஓர் புதிய சுப்பிறீக்கோட்டு நீதவான்—"பிஸிட்ஸ் ஹொன் டிநூதல்" என்னுமிடத்தில் ஸிரேஷ்ட நீதிபதியாயிருக்கும் மெஸ். W. S. ஷோ வென்பவர் இலங்கைச் சுப்பிறீங்கோட்டு நீதிபதிகளிலொருவராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கஞ்சாலேகியம்—கொழும்பு வைத்தியரொருவர் கஞ்சாலேகியம் வைத்திருந்து பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டனர். அந்தக்குற்றத்துக்காய் அவருக்கு 100 ரூபாய் அபராதம் விதிக்கப்படலாயிற்று.

## வர்த்தமானத்திரட்டு.

### யுத்த தந்தி.

1ம் குதிரைப்படையுடன்சேர்ந்த சர்மனிய இளவரசர்காயப்பட்டு சப்போல்பட்டினத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கே சத்திரசிகித்தை செல்லுகிறது.

18உ. பிரித்தானியஅரசர் தம்சேனைகளுக்குப் புத்திமதிசொல்லியனுப்பினர்.

லோட்கிற்சினர் தமது புத்திமதியை அச்சிட்டு ஒவ்வொரு வீரனுக்குங்கொடுத்து அதை அவரவரே தமது சம்பளப்புஸ்தகத்துள் வைத்துக்கொள்ளும்படி கற்பித்தார். அதில் கொள்ளை குடி கூத்தி ஆதியவைகளை முழுதும் விலக்கும்படி கற்பித்திருக்கிறார்.

பிரித்தானியஅரசியாகிய மேரிராணியின் சகோதரரான பிரின்ஸ் அலெக்சான்றர் யுத்தத்துக்குப் போகிறார்.

யுத்தம்நடக்குமிடத்திலிருந்து பத்திராதிபர்கள் புறப்பட்டுவிட்டபடியால் சரியான போர்ப்புதினங்கள் இனிமேல் உடனுக்குடனே வராது.

பிரான்சுச்சேனையின் உபயோகத்திற்காக ஆபிரிக்காவிலிருந்துவந்த சாமான்கப்பல்களைப் பிரித்தானியகப்பல்கள் காவல்செய்துகொண்டுவருகையில் "கோபேண்" "பிரேஸ்லா" என்ற சர்மனியகப்பல்கள் பயமுறுத்தியபோது பிரித்தானியகப்பல்களைக்கண்டு ஓட்டம்பிடித்தன. இக்கப்பல்கள்தான் யுத்தஆரம்பத்தில் அல்சீரிய துறைமுகத்தில் பீரங்கிசுட்டு அங்கிருந்து டாடலிஸ் என்றதுருக்கிக்கடலுட்புகுந்தது, அவைகளைத் துருக்கர் விலையாய்வாங்கிவிட்டார்களென்றுங் கதைபுகைகிறது.

பிரேசில்தேசப் பழைய தேசாதிபதியையும் மனைவியையும் சர்மனியவீரர் துப்பாக்கிக்கட்டைகளாலடித்துச் சுவிற்சலாந்தின் எல்லையில் தாக்கி எறிந்ததற்காகப் பரிகாரஞ்செய்யும்படி பிரேசில் சர்மனியைக்கேட்கிறது.

உவேல்ஸ்இளவரசர் சேர்த்துவருங் கஷ்டநிவிர்த்திச்சேகரத்துக்குஒன்றரைலட்சம்பவுண் சேர்ந்திருக்கிறது.

துருக்கி நடுவுநிலைமைதவறுதிருக்குமாம்,

சர்மனி பெல்சியத்துக்கூடாகச்செல்வதைப் பெல்சியந் தடுக்காவிட்டால் எல்லாம் ஒழுங்காகுமென்று ஒல்லாந்திலிருக்குஞ் சர்மனிய ஸ்தானுபதி ஒல்லாந்து அரசாட்சிமூலமாய்ப் பெல்சியத்துக்கு அறிவித்தார். அதற்குப்பெல்சியர் இணங்கவில்லை.

பெல்சிய ராசகுடும்பம் அன்றுவேப் நகருக்குப் போய்விட்டது.

அல்சேஸ்மாகாணத்தின் வடபகுதியில் பிரான்சர்முன்னேறச் சர்மனியர் பின்னிடுகிறார்கள். சர்மனிய யுத்ததளவாடங்களைப் பிரான்சர் கைப்பற்றினர், வாசேஸ்மலைநாட்டைப் பிரான்சர்கைப்பற்றினர். ஸார்க்பர்க் கோட்டைக்குத்தெற்கே சர்மனியர் பீரங்கிஅரண்கட்டியிருக்கையில் பிரான்சர் அவர்களைத் தோற்கடித்துவிட்டார்கள்.

சர்மன்பூமியில் முக்கியமான 5 இடங்களை ருசியர் பிடித்துக்கொண்டனர். நூற்றுக்கணக்கான சர்மனியர் சிறைபிடிக்கப்பட்டனர்.

19உ. வடகடலில்காவல்செய்யும்பிரித்தானியகப்பல்களுக்கும்சர்மனியகப்பல்களுக்குந்தனித்தனியே அங்குமிங்குஞ் சண்டைநடந்தது. இருபகுதிக்குஞ் சேதமில்லை.

இங்கிலந்திலுள்ள சர்மனியரின் புறக்கள் செய்திகொண்டுபோகப் பழக்கப்பட்டிருந்தமையால் அவைகளை அங்கிலேயர் கொல்லுகிறார்கள்.

எகிப்து, இந்தியா, மத்தியஆசியா, அல்சீரியா, மொரோக்கோ என்றஇடங்களில் இங்கிலந்துக்குவிரோதமாய்க் கலகம்மூட்டிவிட, சர்மனி வேவுகாரரையனுப்பியிருக்கிறதாம். தென்னாபிரிக்காவின் சுரங்கவேலைகாரரையுங் கிளப்பிவிடக்கூடுமென எச்சரிப்பாயிருக்கிறார்கள்.

பெல்சியத்திலிருக்கும் பல்கேரிய உத்தியோகஸ்தர் விரும்பினுல் பெல்சியராணுவத்திற் சேரலாமென்று பல்கேரியா அனுமதிகொடுத்திருக்கிறது.

வாஸ்ஜேஸ்மலைநாட்டைப் பிரான்சர் தம்வசப்படுத்திக்கொண்டார்களாம்.

டினுண்டில்மியூஸ்நதியைச் சர்மனியர் தாண்டமுயற்சித்தும் தென்பாகத்தில்பிரான்சியபடை அவர்களை வெகுசேதத்துடன் துரத்திவிட்டது. வடபாகத்தில் மாறுதலில்லை. அங்கே சர்மனியகுதிரைப்படை அரண்கட்டிக்கொண்டிருக்கிறது.

ஆல்டர்பேச் நகரத்தின்மேலே சென்ற சர்மனிய ஆகாயவிமானமொன்றைப் பெல்சியர்சுட்டுக் கீழேதள்ளினர். அதிலிருந்த சர்மன் உத்தியோகஸ்தன் கால்கள்முறிந்துபோயும் கைத்துப்பாக்கியால் பெல்சியரைச் சுடப்பார்த்தான். இராணுவ சாமாச்சாரம் எழுதப்பட்ட காயிதமொன்று அவனிடமிருந்து எடுக்கப்பட்டது.

நாமொரன்றுக்கு 75 மைல்தூரம் பிரான்சிய பெல்சியபடை முன்னேறிப்போகின்றனவாம்.

பிரான்சியகொடியைப்போட்டுக்கொண்டு ஓர் சர்மனிய ஆகாயரதம் மேலேபறந்துசென்று வியூன்வில்லென்கிற பிரான்சுப்பட்டினத்தின்மேல் மூன்று வெடிக்குண்டெறிந்துவிட்டுச் சென்றது. சேதமில்லை.

முல்காஸனில்நடந்தசண்டையில் பிரான்சரின் அல்சீரியபடை சர்மனிய அரண்களைத்தாக்கித் துப்பாக்கிமுனையில்மாட்டிய கட்டியகளால்குத்தி சர்மனியருக்கு வெகுசேதம்விளைத்தார்கள்.

அருண்காட்டுச்சக்கிரவர்த்தியும் வேனிய அரசுமாரும் பிரான்சுசேனையிற்சேர்ந்து போர்செய்யத் தயாராயிருக்கின்றனர்.

கொரோடாக்குஸ்யின் என்ற எல்லையில் ருசிய அவுஸ்திரிய படைகளுக்கிடையில் 5 மணிநேரஞ் சண்டைநடந்தது. ஈற்றில் அவுஸ்திரியபடைதோற்றுப்போயிற்று. ருசியபடை துரத்திப்போயிற்று.

சர்மன் இளவரசரும் இளவரசியுங் கொலைசெய்யப்பட்ட போஸ்னியா கொர்க்லிக்கோவிஞ் என்றவிடத்தில் சேர்வியரே குடியதிகள். அங்கு கலகம் மூற்றிவருகிறது.

மிக இரகசியமானவற்பாடுகள்செய்து யாதொருசேதமுமின்றி அங்கிலோசேனை பிரான்சியபோமாத்துறைமுகத்தைச் சேர்ந்துவிட்டன. இது அங்கிலேயரின் இரகசியங்கள் எப்படிக்காப்பாற்றப்படுகிறதென விளங்குகிறது. பிரித்தானிய சகோதாரரின்வரவினுல் பிரான்சியர் அகமகிழ்ந்து கொண்டாடினர்.

இதுவரையில் சர்மனிய அவுஸ்திரிய வியாபாரக்கப்பல்கள் 110 பிடிக்கப்பட்டிருக்கின்றன.

தென்னுபிரிக்காவில் கோல்ட்கோஸ்ட் என்ற பிரித்தானியநாட்டுச்சேனைகளுக்கும் சர்மனியபடையொன்றுக்கும் யுத்தமுண்டாய் அனேக சர்மனியர் சிறைபிடிக்கப்பட்டனர்.

சர்மனியகடறகரைக்கு வெகுதூரத்தில் 18உ சர்மன் சண்டைக்கப்பலொன்றும் பிரித்தானிய சண்டைக்கப்பல்களும் எதிர்த்துப் பீரங்கிப்பிரயோகஞ்செய்தும் பிரித்தானியகப்பல் ஒதுங்கிவிட்டதாகவும் சாமன்கப்பல் மறைந்துபோயிற்றென்றும் ஓர் பத்திரக்கடிதர் தெரிவித்தாராம்.

மொன்றினிக்குரேவைக்காப்பாற்ற ஸ்குற்றரிகளிலிருந்த பிரான்சச்சேனை செடிஞ்சுநகருக்குப்போகும்படி கட்டளையிடப்பட்டது.

சீனுவில் சர்மனிக்கிருக்குஞ் செல்வாக்கை யப்பான் குறைத்துவிடுமேயல்லாது அங்கு பிறர்க்கிருக்கும் காடுகளைப்பற்றி ஏதொரு நடவடிக்கையும் நடத்தாதென்று யப்பான்மந்திரி கூறினர்,

சர்மனிக்கும் யப்பானுக்கும் யுத்தமுண்டானுல் பெர்லினிலிருக்கும் யப்பானிய ஸ்தானுபதியின்ஆபீசை அமரிக்க ஐக்கியதேசம் ஒப்புக்கொள்ளவேண்டுமென யப்பான்அதைக்கேட்டிருக்கிறது.

20உ பெல்சியத்திலிருந்த பிரான்சுக்கட்சிச்சேனைகள் பின்வாங்கிவிட்டன. லோவேன்நகரம் பிடிபட்டுப்போயிற்று. பெருங்கூட்டமான சர்மனியர் லீச்நகருக்கும் நாமார்நகருக்குமிடையில் மியூஸ்நதியைத்தாண்டினுர்கள்.

டீஸ்டுபட்டினத்தைச் சர்மனியர்தாக்கி றெயில்ஸ்தேசன்களைக்கொள்ளையடித்து இடித்துத்தன்ளிப் பட்டினத்தை முற்றுக்கைபோட்டிருக்கின்றனர். டர்லிமாண்டென்னும் பெல்சியபட்டினத்தையுஞ் சர்மனியர் தகர்த்தார்கள்,

சர்மனியசேனை பெல்சியசேனை தங்கியிருக்குமிடத்துக்குச்சமீபமாய்ச் சத்தஞ்செய்யாமல் நெருங்கிவருவதை ஓர் பெல்சிய ஆகாயகமனிகண்டு தெரிவித்துவிட்டான், உடனே பெல்சியகுதிரைப்படைகள்முன்னேறிச் சர்மனியபடையைத்தாக்கித் தடுத்துவிட்டார்கள்.

அனேகபொருட்களும் மனிதருஞ் சேதமானபின் சர்மனியபடைகள் மியூஸநதியின் இடதுகரையிலும் நிலைகொண்டு பிரான்சரைஎதிர்க்கத்தொடங்கிவிட்டார்களென்று பெல்சிய அரசாட்சியார் தெரிவித்திருக்கின்றனர்.

தென்கரையில் பிரான்சியசேனையுடன் சர்மனியசேனைபொருதித் திரும்பியோடினர். வடகரை திறப்பாயிருந்தமையால் வெகுதூரம் முன்சென்றுவிட்டனர்.

சர்மனியர் எதிர்ப்பட்டோரெவ்வரையும் ஈவிரக்கமின்றிக் கொன்று தம்முரட்டுக்குணத்தைக் காட்டுகிறார்களாம், பிரான்சு செயமடைகவென்று கூவிய மூன்றுபிரான்சரை உடனே சுட்டுவிட்டனர். சர்மனியில் பிரயாணஞ்செய்த இரண்டு அமரிக்க ஸதிரிகளை அங்கிலேயரெனநினைத்து வையப்பூடைத்துவிட்டனர். சர்மனியின் வடமேற்கில் டான்சிக் என்ற பட்டினத்திலிருந்த பிரித்தானியதூதரை அவமரியாதையாய் நடத்தினர்.

சர்மனியரின் மிருகத்தன்மையைக்குறித்துப் பிரான்சில் வெகுவாய்ப் பேசப்படுகிறது,

பெல்சியத்தின் வழியாய்ப்போக இனியாவது தம்மைவிட்டுவிட்டால் யுத்தமுடிவில் முன் பெல்சியம் இருந்தபடியே ஒப்புவித்துவிடுகிறதாயும் இதுவரையில் பெல்சியந் தடுத்ததற்காய்த் தாங்கள் பழிவாங்கவில்லையென்றும் மறுபடியும்சர்மனிகேட்டும் பெல்சியம் இணங்கவில்லையாம்.

தென்மார்க்குதேசத்தின் மேற்குக்கரையிலுள்ள போர்ப்ஜேர்க் என்றபட்டினத்தைக்கடந்து ஓர் சர்மனிய ஆகாயரதம் 1000 அடிஉயரத்தில்பறந்துசென்றதாம்.

அவுஸதிரியாவின் ப்ரேக்நகரில் செச்சாதிப்போர்வீரர் கலகஞ்செய்து நாள்முழுதும் அப்பட்டினத்தைத் தம்வசப்படுத்திக்கொண்டனர். பிறகு துணைப்படைவந்து அவர்களையடக்கித் தண்டனைசெய்யத்தொடங்கிற்று. தெருவில்கண்ட அச்சாதியாருடன் ஸ்திரிகளையுங் குழந்தைகளையும் ஈவிரக்கமின்றிக் கொன்றுவிட்டனராம்.

அவுஸ்திரியசேனையைச்சேர்ந்த தளகர்த்தர்சிலரும் யுத்தவீரரும் அரசாட்சியாரின் அனுமதிப்படி சுட்டுக்கொல்லப்பட்டார்களாம்,

ருசியர் சர்மனியஎல்லையில் 8 பெரியபீரங்கிகளையும் 2 சிறியபீரங்கிகளையும் பிடித்தனர்.

சர்மனியின் கிழக்குப்பக்கத்திலிருக்கும் கும்பின்னன் என்றபட்டினத்தை ருசியர்பிடித்துக்கொண்டனர்,

எட்வேட்அரசரின் சகோதாரரான கனுட்கோமனின் புத்திரனுகிய பிரின்ஸ்ஆதர் யுத்தத்திற்சேவைசெய்ய விருபுகிறாராம்.

பெல்சியசேனை பிரசல்சிலிருந்து பின்வாங்கச் சர்மனியர் அதைப்பிடித்துக்கொண்டார்கள், பெல்சியத்தில் நகரின்செய்திமுதலாய் அறியக்கூடாதிருக்கிறது.

எர்சாட் என்றவிடத்தில் பீரங்கிகளுடன் சர்மனியசேனை பெல்சியவைத்தாக்கப் பெல்சியசேனை பிசாசுபோல மிகு உக்கிரமான சண்டைசெய்தனர். சர்மனியபடை பத்துமடங்கதிகமாயிருந்ததினுல் பெல்சியர் லோவென் நகரைநோக்கிப் பின்வாங்கிப்போயினர். காயப்பட்ட 288 பேர்களைப் பெல்சியசேனைத் தளகர்த்தர் மேசுஜர்சில்லன் வைத்துக்கொண்டு சத்துருக்கள் பின்சென்று தாக்காமல் தடுத்துக்கொண்டார். அவாதுசேனைகளில் 7 பேர்மாத்திரம் சேனை ஸ்தானத்துக்குத் திரும்பிப்போயினர்.

பெல்சியர் பிரசல்சை விட்டுவிடத் தீர்மானித்தபின் சர்மனியசேனையைத் தொந்தரவுசெய்யாமல் சனங்களைச் சும்மாயிருக்கும்படி பட்டினத்தின் நீதிபதி ஒருவிளம்பரம் பிரசித்தஞ்செய்தார். பட்டினக் காவலாளரான இருபதினுயிரம்பேரும் கெண்ட் என்றபட்டினத்துக்கு அனுப்பப்பட்டார்கள்,

கும்பிகன்னன் என்றஇடத்தில் ருசியசேனை 12 சர்மனிய பீரங்கிகளையும் அநேக போர்வீரரையும் பிடித்துக்கொண்டது.

போலன்மாகாணத்தில் 6 அவுஸதிரிய உத்தியோகஸ்தரையும் 250 யுத்தவீரரையும் ருசியர் பிடித்துக்கொண்டனர்,

ஷாபட்ஸ என்றஇடத்தில் அவுஸதிரிய சேர்வியருக்கிடையில் நடந்தசண்டையில் 30 சிறுபீரங்கிகளையும் ஏராளமான துப்பாக்கிகளையுங்குண்டுகளையுங் குதிரைகளையும் போர்வீரரையும் அவுஸதிரியசேனை இழந்துவிட்டது. சில அவுஸதிரியர் சிறைபிடிக்கப்பட்டு நீஷ் என்ற பட்டினத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

ஒல்லாந்திலுங் கடற்படையைத்தயார்செய்யச் செலவுக்குப் பணங்கேட்டிருக்கிறார்கள்.

21உ லீச்சுக்கோட்டைகள் இன்னும்பிடிக்கப்படவில்லை. ஆகையால் சர்மனியர் முன்னேறினுல் நமாருக்கும் அண்டர்வேப்புக்குமிடையில் அகப்பட்டுக்கொள்வார்களாம்.

பெல்சியசேனை அண்டவேர்ப்புக்குப் போய்விட்டது. அங்கே பிரித்தானிய பிரான்சியர்கலந்து வேலைநடத்துவார்கள். பெல்சியசேனை பின்வாங்கினது ஒரு இராசதந்திரமென்று சொல்லப்படுகிறது,

துப்பாக்கிமுனையில்மாட்டிய ஈட்டியாற்குத்திச் சண்டைசெய்து மூல்காசனைப்பிரான்சர்பிடித்துக்கொண்டார்கள். 6 பீரங்கிகள் 6 பெட்டி மருந்து குண்டுகளும் பிரான்சர்கைப்பட்டன. கூப்வில்லர் என்றஇடத்தையும் பிரான்சர் கைப்பற்றினர்.

லோறேனில் பிரான்சியசேனை சர்மனியசேனையால் தாக்குண்டு பின்வாங்கிவிட்டது.

சர்மனியரின் வியாபாரத்தைத்தொலைக்க அங்கிலேயர் எற்பாடுசெய்வதுபோலப் பிரான்சருஞ் செய்ய யோசிக்கிறார்கள்,

மூன்றுநாட்சண்டையின்பின் சர்மனியின் கிழக்குஎல்லையைத்தாண்டி ருசியசேனை 20 மைல்தூரம் உட்சென்று லிக்என்னும் சர்மனியபட்டினத்தைப் பிடித்துக்கொண்டது. கிழக்கெல்லைமுழுதும் யுத்தம்நடக்கிறது.

சீனுவில் சர்மனியர்வசமிருக்கும் கியோசோபட்டினத்தை அமரிக்க ஐக்கியதேசத்திடம்விட்டால் அதை ஒப்புக்கொண்டு சீனுவிடம் விட்டுவிடக்கூடுமோவென்று அமரிக்கஸதானுபதியைச் சர்மனியின் ஆலோசனைப்படி சீனஅரசாட்சியார் கேட்டார்களாம், அப்படிச்செய்யில் பிரித்தானியரும் யப்பானும் ஒப்புக்கொண்டாலொழிய அமரிக்கர் சம்மதிக்கமாட்டார்களென்று உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படுகிறார்களாம்.

செப்லின்என்ற சர்மனியரின் பெரியஆகாயக்கப்பலொன்று லொரிலாண்டில் லையின்நதியோரமாய் மேலேசென்றது. ஒல்லாந்துவீரர் அதைச்சுட ஆரம்பித்தும் அது எட்டிப்போய்விட்டது. வேறொன்று ஒல்லாந்திலுள்ள டாங்டநேச்நகரின்மேல் பறந்துசென்றது. ஒல்லாந்திலுள்ள ஊஸ்ட்பர்க் என்ற நகரின்மேலும் ஓர் சர்மனிய ஆகாயரதஞ்செல்லக் காவற்காரன் அதன்மேற் பீரங்கியாற்சுட்டான். குண்டுபட்டு அதன் யந்திரமுடைந்துபோனமையால் அது கீழேஇறக்கவேண்டியிருந்தது. அதை ஒட்டிச்சென்றவனுடைய ஆயுதங்களை ஒல்லாந்தர் பறித்துக்கொண்டனர்

ஓர் பிரான்சிய ஆகாயக்கப்பல் இரவில் பெல்சியத்திற்றங்கியிருந்த சர்மனியபடைக்குமேலேசென்று பலகுண்டுகளைச்சேனைகளுக்குள்வீசிற்று. சர்மனியசேனை நிபங்களையனுப்பிவிட்டு அதன்மேற் பீரங்கிகளைச்சுட்டும் அபாயமில்லாமல் தப்பிற்று.

சிறைபிடிக்கப்பட்ட சர்மனியரில் 18 இராணுவஉத்தியோகஸதரும் 432 போர்வீரரும் பெல்சியத்தின் பெருசல்பட்டினத்திலிருந்து பிரான்சின் வடகோடித்துறைமுகமான டன்கர்க்என்றதுறைமுகத்துக்குக் கொண்டுபோகப்படுகிறார்கள்.

ஆபிரிக்காவின் கிழ்த்திசையிலுள்ள சர்மனிக்குள்ள டெர்—இலாலம் என்னுந்தீவை பிரித்தானியயுத்தக்கப்பலொன்றுதகர்த்துவருகிறது.

லோஸ்னிட்ஸா என்றஇடத்தில் அவுஸ்திரியருக்கும் சேர்வியருக்கும் 4 நாளாய்ச்சண்டைநடந்து சேர்வியர் செயம்பெற்றனர். ஆயிரக்கணக்கான ஆஸ்திரியர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

கிரேக்க துருக்கிய தேசங்களின் ராசதந்திரிபுணர் தற்போதுள்ள யுத்தநிலைமைக்குறித்து யோசிப்பதற்காக ரோமேனியாவின் தலைநகருக்குப்போயிருக்கிறார்கள்.

22உ அலோஸ்டு கேட்டெர்ன் என்றஇருபட்டினங்களையும் சர்மனியர்பிடித்துக்கொண்டனர். கெண்டுபட்டினத்திலும் வந்துவிடுவார்களோவென்றுபயந்து சனங்கள் ஆஸ்டென்றுஎன்ற துறைமுகத்தைநாடி ஓடுகிறார்கள்,

கெண்டையும் ஆஸ்டெண்டையும் சர்மனியர் பிடித்துவிட்டார்கள்,

யுத்தசெலவுக்காய் பிரசெல்சுநகரம் 80 லட்சம் பவுண் செலுத்தவேண்டுமென்றும் லீச்மாகாணம் 25 லட்சம்பவுண் செலுத்தவேண்டுமென்றும் சர்மனியர் கேட்டிருக்கிறார்கள்.

ஒரு சர்மனியன்கூடப் பெல்சியத்தி லிருக்கவிடாமல்செய்து பெல்சியத்தைமீட்பதாகப் பிரான்சு தெரிவித்திருக்கிறது.

பெல்சியத் துட்புகுந்தவகை.

சர்மனியர் பிரசல்ஸ்நகருட்புகுந்தபோது முதலில் துப்பாக்கியும்படைஉட்புகுந்தது. அதன்பின காலாட்படையின் பீரங்கிகளும் குதிரைப்படையின் பீரங்கிகளும்வந்தன. அவைகளுடன் முற்றுக்கையிட்டு கரைத்தகர்க்கும் ஒரு யந்திரத்தையிழுத்துக்கொண்டு இஞ்சினீர்ப்படைவந்தது. சிறுபீரங்கிகள் ஏற்றப்பட்டிருந்த 100 மோட்டார்வண்டிகள் பின்வந்தன. ஒவ்வொருபட்டாளத்தின் முன்னும் பாண்டுவாத்தியமும் வாசிக்குங் கூட்டமொன்று சர்மன்தேசகீதத்தைப்பாடிக்கொண்டு முன்சென்றது. காலாட்படை சுசர்மத்தியில் உல்லாசநடையுடன்செல்லவே சனங்கள் வாயைத்திறந்துகொண்டு வேடிக்கைபார்த்துநின்றார்கள். சேனைகளும் மரியாதையாய் நடந்துகொண்டார்கள். ஆனுல் சிலர் அருமையாக அசுந்தைகாட்டினர்கள். பெல்சிய இராணுவஉத்தியோகஸ்தரில் இருவரை விலங்கிட்டுக் குதிரைமதிச்சென்ற சர்மனிய யுத்தவீரன் ஒருவனுடைய கால்அங்கவடியில் வாராற்பிணைத்து நடத்திக்கொண்டு போகவதையும் பெல்சியபடைத்தலைவரின் உடைமாட்டி ஒரு காடியை இழுத்துக்கொண்டு போவதையுஞ் சனங்கள் கண்டவுடன் ஆத்திரத்தை அடக்கமுடியாமல் தவித்தார்கள்.

பிரசல்ஸிலிருந்து ஆண்ட்வேர்புக்குப் பின்வாங்கினபடைக்குக் காவலாய்ச்சென்ற சிறியபடை சர்மனியபடையால்தாக்கப்பட்டு அதிக கஷ்டப்பட்டார்கள். சர்மனியர் வழிகளை அடைக்கிறார்க

# சன்மார்க்கபோதினி அநுபந்தம்.

௧௯௧௪ம் ௵ புரட்டாசி ௴ ௧௨ செவ்வாய்க்கிழமை.

(மூன்றும்பக்கத்தொடர்ச்சி)

துருக்கிராச்சியத்தின் எப்பாகத்தையாவது பிடித்து அதைப் பின்னப்படுத்தத் தாம் நினைக்கவில்லையென்று இங்கிலாந்தும் பிராஞ்சும் ருசியாவும் உறுதிகூறியிருக்கின்றன.

## யப்பான்.

யப்பான் அனுப்பிய இறுதிக்கடிதத்திற்குப் பதில் ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்குள் சொல்லாவிட்டால் 4 மணிக்குப் பெர்லினைவிட்டுப் புறப்பட்டுவிடும்படி அங்குள்ள ஸ்தானாபதிக்கு யப்பான் கட்டளையிட்டது.

23௳ சர்மனியுடன் யுத்தஞ்செய்வதாக யப்பான் பிரசித்தஞ்செய்துவிட்டது. கியோச்சோவை யப்பானியர் தாக்கத்தயாராயிருக்கிறார்கள். அனேகமாயிரஞ் சர்மனியர் அதைக் காவல்செய்கிறார்கள், துறைமுகத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அனேகசுரங்கங்கள் வைக்கப்பட்டிருக்குமெனநம்பப்படுகிறது.

மொன்றினிக்கிரோநாட்டின் மேற்கெல்லையில் அவுஸ்திரியாவுக்குரிய கட்டாரோ என்றதுறைமுகப்பட்டினத்தைப் பிராஞ்சுக்கப்பற்படையும்மொன்றினிக்கிரோவாருஞ்சேர்ந்து தாக்குகிறார்கள்.

அருவிவெட்டிக்கொண்டிருப்பவருட்பட ஆயுதந்தரிக்கக்கூடிய எவனும் சேனையிற்சேரவேண்டுமென்று அவுஸ்திரியா கட்டளை பிறப்பித்திருக்கிறது.

அதிரியாற்றிக்கடலில் பிராஞ்சியகப்பல்களுக்கு உதவிசெய்வதாக அவுஸ்திரியா இத்தாலிமேல் குறைகூறுகிறது.

ஹியாடிஸ், சிட்டிஆப்விலின்செஸ்டேர் என்னும் இரண்டு பிரித்தானிய வியாபாரக்கப்பல்களைச் சர்மனியர் கடலில் அமிழ்த்திவிட்டார்கள்.

24௳ சர்மனியரைப் பிராஞ்சர் வலுவில்தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். மான்சுமுதல் லக்சம்பேர்க் எல்லைவரையில் எங்குஞ்சண்டைநடக்கிறது. சர்மனியசேனைகள்முழுதும் சண்டைஸ்தலத்துக்குவந்து சண்டையிடுகின்றன. சேனைகள்தொகை மிகப்பெரிதாயிருப்பதினால் இன்னது நடந்ததென்று சொல்லக்கூடாதிருக்கிறது. ராணுவ ரகசியங்கள் வெளிவராமல் காக்கப்படுகின்றது.

ஷார்லிராயில் முரட்டுச்சண்டைநடந்தது. பிரான்சுச்சேனையை ஊடறுத்துச்செல்வதே சர்மனியரின்நோக்கம். ஷார்லிராயைச் சர்மனியர் பிடித்துக்கொண்டனர். அதைப் பிராஞ்சுச்சேனை திரும்பப் பிடித்துக்கொண்டது. அதைநோக்கி 3 லட்சம் சர்மனியர் போகிறார்கள்.

பெல்ஜியத்திலுள்ள மான்ஸ் என்றஇடத்துக்கருகில் பிரித்தானியபடைகள் ஓர் பகலும் இரவும் இடைவிடாமற்சண்டைசெய்து தங்கள் ஸ்தானத்தை விடாமல்நின்றன.

சுமாரை முரட்டுத்தனமாய்ச் சண்டைசெய்து சர்மனியர் பிடித்துவிட்டார்கள். பிராஞ்சியப்படைகள் பின்வாங்கிப்போயின.

22௳ நடந்த ஒருசண்டையில் பிரித்தானியபடையைச்சேர்ந்த லெப்டினன் லார்டுலெவென் அபாயமான காயப்பட்டார்.

அல்செயிசில் டோனன் லாலீஸ்என்றஇடங்களிலிருந்த பிராஞ்சுத்துருப்புகள் அதை விட்டுவிட்டுவரும்படி கற்பிக்கப்பட்டார்கள். நான்சிஎன்ற பிராஞ்சுப்பட்டினம் கோட்டைகளாலரண்செய்யப்பட்டிருப்பதினால் அதே பிராஞ்சுச்சேனைசிற்கத் தகுந்தஇடம்.

நமர் பழையகாலைக்கட்டிடமென்றும் அதையடுத்துச் சில தனிக்கோட்டைகள்சமீபகாலத்திற்கட்டப்பட்டனவாயினும் லீச்சுக் கோட்டையைப்போல் அது பலமில்லாதவையென்றும் அதன் ஆயுதங்கள் தற்காலத்திற் குபயோகமற்றவையென்றும் சர்மனியர் போகும்வழிக்குக் குறுக்கேயிருப்பதால் அதைச் சர்மனியர்பிடிக்க அவசியமாயிருந்ததென்றும் கணக்கற்ற சர்மனியர்கூடி அதைத் தாக்கினார்களென்றும் ஆனல் பிராஞ்சியகட்சியார் தங்குமிடங்களுக்குப் பேய்ச்சேருகிறவரையில் சமாளித்துவிட்டதுபோதுமென்றும் யுத்தநிபுணரபிப்பிராயப்படுகிறார்கள்.

இன்ஸ்டெர்பேர்க் என்றஇடத்தில் சர்மன்சேனையை ருசியர் தோற்கடித்துவிட்டார்கள் என்பது முற்றும் உண்மையல்லவாயினும் அந்நகரத்தை ருசியா பிடித்துக்கொண்டதும் அதிலிருந்து டான்சிக் துறைமுகத்துக்குச்செல்லும் புகைரதப்பாதையைத் தம்வசப்படுத்திக்கொண்டதும் உண்மையாம்.

ஆனல் இனிக் கடக்கவேண்டிய இடங்களில் ஏரிகளும் சேற்றுநிலங்களும் நிறைந்திருப்பதால் அவர்கள் முன்செல்வது தடைப்படுமாம்.

சமீபகாலத்தில் சேனையைக்கூட்டும் உத்தேசம் இத்தாலிக்கு இல்லையென்றும் அப்படிக்கூட்டினாலும் நடுவுநிலைமையைக் கைவிடுகிறதாகக் கருதக்கூடாதென்றும் இத்தாலியமந்திரி சொன்னார்.

23௳ இரவு 1 மணிக்குமுன் பிரித்தானிய முதலமந்திரியார் தமது ஆபீசுக்குவந்து 24௳ மாலை 8 மணிக்கு யுத்தமந்திரியாகிய லோர்ட் கிச்சினரைக்கண்டு பேசிக்கொண்டிருந்தார், அதன்மேல் மந்திரிசபைகூடி ஆலோசனைநடந்தது,

போரில்சிறைபிடிக்கப்பட்டவர்களாய் இப்பொழுது இங்கிலாந்திலிருக்கிற சர்மனியரைக்கொடுத்துவிட்டுத் தேசசஞ்சாரஞ் செய்துகொண்டிருந்தபொழுது சர்மனியில் சிறைபிடிக்கப்பட்ட பிரித்தானியரை மீட்கும்பொருட்டு முன் பிரித்தானியமந்திரியாயிருந்த மெஸ், பால்போர் முயற்சிக்கிறாராம், அது சரியல்லவென்றும் அரசாட்சிப்பகுதியார் அதைக் கவனித்து வருகிறார்களென்றுந் தெரிவிக்கப்பட்டது.

## ருசியரின்முன்னேற்றம்.

24௳ ருசியர் இன்ஸ்டர்போக் என்றஇடத்தைக் கைப்பற்றினர். இது பெர்லினுக்கு 300 மைல் தூரத்துள்ளது.

கைடன்பேர்க்கில் சர்மனியர் ருசியரால் தாக்குண்டு சில துப்பாக்கிகளையும் விட்டுவிட்டு ஓடினார்கள்.

27௳ ருசியர் கோர்டன்பேர்க், செனஸ்பேர்க் பிஷவ்ஸ்பேர்க் என்றஇடங்களைப்பிடித்து அப்பாலுஞ்செல்லுகின்றனர்,

கலிசியாவையும் ருஸைப்போலையுங் கைப்பற்றினர்,

கோவிபசாரிலுள்ள சஞ்சாக் என்றஇடத்தைவிட்டு அவுஸ்திரியசேனை போய்விட்டது,

கிழக்குப்பிறஷியாவிலே ருசியரைக்கண்டசர்மனியர் முயல்போல நடுங்குகிறார்களாம், 100 பீரங்கிகளை ருசியர் எடுத்தார்களாம்,

## பிராஞ்சியஎல்லையுத்தம்,

25௳ சார்லகோம் என்றஇடத்தில் பெரியசண்டைநடந்தது. இருபகுதியும் ஒருவரை ஒருவர் செயிக்கவில்லை. சுமறஸ் அமட்சஹஸ் என்றஇடங்களைத்தாக்கினதைச் சர்மனியர்விட்டுவிட்டார்கள். இரண்டு பிரித்தானியகுதிரைப்பட்டாளம் சர்மனியருக்கு அதிகசேதம்விளைத்தது.

சர்மனியர் பிராஞ்சியபடையின்முன்னணியை வலன்சியன்ஸுக்கும் சம்லீல்என்ற இடத்துக்குமிடையில் ஊடறுத்துச்சென்று பொன்ட, எமாராக், மார்சியன்ஸ் என்றஇடத்தில் சர்மனியமுன்னணி நிற்கிறது,

26௳ பிரித்தானியருக்கும் சர்மனியருக்குமநடந்தசண்டையில் இருபகுதிக்குங்கனத்தசேதம். பிரித்தானிய ஆபிரிக்கபடைகள் மூர்க்கமாய்த்தாக்கின. ஆனல் யுத்ததலைமைச்சேனாபதியின்கட்டளைப்படி அங்கிலேயர் பின்னிட்டனர்.

அல்சீரியபடைகள் துப்பாக்கிமுனையில்மாட்டிய ஈட்டியால்தாக்கி வெகுதிறமைகாட்டினார்கள்.

நமது சக்கிரவர்த்தியின் மாமனான பிறதரிக் லேயோட்போல்ட் இளவரசர்கொல்லப்பட்டார். இவர் சர்மனிய படைவகுப்பைச் சேர்ந்தவர்,

அன்றவேப்பில் ஒரு சர்மனிய செப்பிளின் ஆகாயக்கப்பல் வெடிக்குண்டெறிந்ததினால் இரண்டுவீடுகள் பஸ்மீகரப்பட்டுப் பலர் கொல்லப்பட்டனர். ஆறுமைலுக்கப்புறம் அதுசுடப்பட்டுக் கீழேயிறங்கிவிட்டது, அதிலிருந்தவர்களும் பிடிக்கப்பட்டார்கள்.

மியுஸ்நதிப்பக்கத்தில் சர்மனியர்தாக்கியபோது பிரிதானிய பிராஞ்சியபடைகள் எதிர்த்துத்தடுத்தன, சர்மனியர் மிகுகொரேமாய்ச் சுட்டுத்தாக்கியும் பிரான்சுப்படை அவர்களுக்குநட்டஞ்செய்துவிட்டுப் பின்னிட்டுவிட்டன.

அன்றவேப்பிலிருந்து ஓர் சேனைபுறப்பட்டுச் சர்மனியபட்டாளத்தை 10 மைலுக்கப்பால் ஓட்டிவிட்டன.

நாமோரில் ஒருகுண்டுபட்டு பிரெடிரிச் சுசெமெனின்சன் என்னும் சர்மனிய இராசகுமாரன் கொல்லப்பட்டார்,

28௳ பெல்சியர் சர்மனியரைத்தாக்க அவர்கள் லூவயினுக்குப்பக்கத்தால் ஓடிப்போயினர், திரும்பிச்சென்றபட்டாளத்தைச் சர்மனியர்கொன்றனர்,

பிரித்தானியரின் சாமான் போக்குவரவுவழியை வெட்டிவிடச் சர்மனியர்தெண்டித்தனர்,

புதன்கிழமை கம்ப்றைலக்கற்றேவில் சர்மனியருக்கும் பிரித்தானியருக்கும் யுத்தம்நடந்தது,

உவர்ஸ்கஸ் பர்னத்தாக்கில் சர்மனியரைப் பிரான்சர் தாக்கினர்,

லூவன் என்றவிடத்தில் பெல்சியர் என்றுநினைத்துத் திருமபிவந்த சர்மனியபடையைச் சர்மனியரேகொன்றுவிட்டுத்தம்பிழையைமறைக்கக் கிரமத்தாா அதைக்கொன்ருர்களென்று சொன்னாராம்.

கான்சிக்கும் வாசேக்குமிடையில் பிரான்சர் சத்துருக்களுக்குக் கனசேதத்தையுண்டாக்கினர், சொற்பஇடத்தள் 1500 பிணக்கள்கிடக்தன, ஒரு அரணினுக்குப்பக்கத்திலிருந்த சர்மனியர் எல்லோருங் கொல்லப்பட்டனர், துப்பாக்கிகளும் நிலையிலேயே பிணங்கள்நின்றன,

சால்லிராயில் சர்மனியர் அங்கிலேயரைத் திரும்பிச்செல்லவிடாமல் தடுத்தார்கள், அதைமீறிப் பிரித்தானியசேனை தங்களுக்கேற்பட்ட புதுஸ்தலத்தைச் சேர்ந்துவிட்டது, வழிநெடுஞ் சண்டைநடந்தது, பிரித்தானியபடையில் 100க்கு 3 பேர் சேதமாயினர், பிரான்சுஅரசாட்சியார் பின்வருமாறு தெரிவிக்கிருர்கள், நமதுசேனையின் இடப்பக்கத்தினின்ற பிரித்தானிய சேனையைப் லூஸ்நதியின் மேற்குக்கரையில் சர்மனியர் தாக்கினர், பிரங்கிசூட்டைக் கவனியாது பிரித்தானியசேனையும் எதிர்நின்று தாக்கிற்று, அவ்விடத்துக்கருகிலிருந்த பிரான்சுச்சேனை இரண்டு சர்மன்சேனையை எதிர்க்க முன்சென்றது, சத்துருக்களின்பீரங்கி கொ●ரமான நிலைக்கக்கிற்று, ஆனல் பிரான்சுச்சேனை தயங்கவில்லை, சர்மனியச்சேனை பிரான்சியசேனையைப் பதிலுக்குத்தாக்கிப் பெருஞ்சேதத்தை விளைத்துவிட்டது, சத்திநில் பின்வாங்க நேரிட்டுவிட்டது, மியூஸ் நதிக்குக்கிழக்கே தெற்குப்பெல்சியத்தில் நமதுசேனைகள் நடமாடக்கூடாத பிரதேசத்தின் வழியாய்ச் சர்மன்சேனை முன்சென்றுவிட்டது, காடுகளுக்கு வெளிப்புறத்தில் சர்மன்சேனை பிரான்சுச்சேனையையெதிர்த்து கடுஞ்சண்டை செய்தது, பிரான்சியசேனை சிமாய்நதிக்கரைக்குப் பின்னிடவேண்டியதாயிற்று, பிரான்சுக்குதிரைப்படை சேதமடையவில்லை, நமதுபீரங்கிகள் சிலநிலங்களாதச் சத்துருவின்பீரங்கிகளிலும்மேலாயிருந்தன.

பிரான்சியசேனை தம்மைப் பாதுகாக்கும்நிலையிலிருந்து சிலகாலிருந்துவிட்டு தக்கசமையம்பார்த்துச் சத்துருவைத்தாக்குவார்கள், பிரித்தானியர் மேலுத்தரவினுல் பின்வாங்கினை●ய்ச் சொல்லுகிருர்கள். பிரான்சிய அல்சீரியப்படைகள் வேகமாக ஈட்டிச்சண்டைசெய்து 2 மைல்தூரம் முன்னேறிப்போனூர்களாம், சர்மனியர்மூலமாக ஒருதந்தி இந்தியாவுக்குவந்தது,

“லீச்சக்கோட்டையைக் காவல்செய்திருந்த பெல்சியசேனைத்தலைவராகிய ஜெனரல் லெமன் ஒருகோட்டையாவிடிக்குவீழ்ந்தகற்குவியலின் அகப்பட்டிருக்கையில் சர்மனியர்கண்டு தம் படைத்தலைவரான ஜெனரல் எம்மீச் முன் கொண்டுபோய்விட, அவருடைய தீரத்தனத்தை மெய்ச்சி அவருடையவாளை அவர்கையிற்கொடுத்துவிட்டாராம். அவரையும் மற்றப்பெல்சிய உத்தியோகஸ்தரையும் சர்மனியபட்டினமாகிய கொலோனுக்கு அனுப்பப்பட்டார்கள்.” (லீச்சக்கோட்டை பிடிபடாதிருக்க தலைவர் பிடிபட்டதெப்படியோ)

